கலைமகள் வெளியீடு—௧௦

உ

கணபதி துணை

திருக்காளத்தி
இட்டகாமிய மாலை

(குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்:
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர்
வெகுதான்ய ௵ மார்கழி ௴
1938

All Rights Reserved]

[விலை இரண்டணா

கணபதி துணை

முகவுரை

இறைவனைப் பாமாலையால் வழிபடுதல் நம் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டுப் பயின்று வரும் வழக்கம். கவி இயற்றும் ஆற்றலுடையார் தம்முடைய குறைகளைப் பாக்களால் இறைவனுக்கு விண்ணப்பம் செய்தல் இயல்பு.

திருக்காளத்தி இட்டகாமிய மாலையாகிய இது நோய் வாய்ப்பட்ட பக்தர் ஒருவர் திருக்காளத்தியப்பரிடம் தம் குறைகளைக் களைந்தருள வேண்டுமென்று வேண்டிப் பாடிய செய்யுட்டொகுதி. இட்ட காமியமென்பது விரும்பப் பெற்ற பொருளென்னும் பொருளினது. தாம் விரும்பிய பொருள் இன்னதென்று குறையிரந்து பாடியமையின் இந்நூல் இப்பெயர் பெற்றது;

"என் மனத்துக்கிட்ட காமியந் தந்தருள்
வாய்கயி லாபுரிக் காளத்தியே" (39)

என்று இந்நூலில் வருதல் காண்க.

இவ்வாசிரியர் இளமையிலே பெண்மயலிற் சிக்கி உழந்ததன் பயனாக நோயுற்று அதனாலும் வறுமையாலும் துன்புற்றவரென்று இந்நூலால் தெரிகின்றது. அவற்றால் மிகவருந்தி உலகிலுள்ள பிற மருந்துகளாற் பயனில்லையென்று கண்டு,

"அருந்தவ மில்லாத வன்மெய் தனிற்பிணியை
மாற்று மருந்துதேன் கைலாய மேய மலைமருந்தே"

என்று உறுதி பூண்டு அத்தலத்தை அடைந்து வழிபட்டவர்.

இவருடைய வாக்கு அன்பு கனிந்து எளிய நடையில் விளங்குகின்றது. திருக்காளத்தி நாதர் பெருமையை இவர் பலபடியாகப் பாராட்டுகிறார். கண்ணப்பரைப் பலவிடங்களிற் சிறப்பிக்கின்றார். அவற்றுள்,

"தருமந் தவஞ்சற் றறியாத வேடுவன் றன்செருப்பு
மருமழந்து வேணிக் கணிமா மலரவன் வாயுதகத்
திருமஞ்ச னக்குடம் புல்லா லவன்மென்று தின்றதசை
அருமந்த போனக மன்றேநங் காளத்தி யப்பருக்கே" (3)

என்னும் செய்யுள் மிகச்சிறந்தது.

இவ்வாசிரியர் பெயர் இன்னதென்று இப்போது விளங்கவில்லை. இந்நூல் இத்தனை செய்யுளுடையதென்றும் விளங்க

வில்லை. பலவருஷங்களுக்குமுன் இந்நூலின் ஏட்டுப் பிரதி ஒன்று காளத்தியிலிருந்த சைவர் ஒருவரிடமிருந்து எனக்குக்கிடைத்தது. இதில் காப்புச்செய்யுளும் அதன்பின் 49-ஆம் செய்யுள்வரையுள்ள செய்யுட்களும் காணப்பட்டன. அவற்றுள்ளும் 32,33,34 என்னும் மூன்று செய்யுட்கள் உள்ள ஏடு கிடைக்கவில்லை. பழந் தமிழ்ச் செய்யுட்களைக் கிடைத்தவரையிலேனும் வெளிப்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்தினால் இந்நூலைக் 'கலைமகள்' வாயிலாக வெளியிடலானேன்.

இதனைத் தம் பத்திரிகையிற் பிரசுரம் செய்வித்த ஸ்ரீமான் ரா. நாராயணசாமி ஐயரவர்களுடைய அன்பை நான் பாராட்டுகின்றேன்.

'தியாகராஜவிலாஸம்'
திருவேட்டீசுவரன்பேட்டை
16—12—38.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

கணபதி துணை

திருக்காளத்தி இட்டகாமிய மாலை

——(0)——

காப்பு

(நேரிசை வெண்பா)

தேமிகுகா ளத்திச் சிவக்கொழுந்தைப் போற்றுமிட்ட
காமிய மாலைக் கலித்துறைக்கு—நேமிபுகழ்
தாளத் தடைவுகொள்பா தாளக் கணபதிதாள்
மேளத் துடன்றுணையா மே.

நூல்

(கட்டளைக் கலித்துறை)

1. திருமான் மலரயன் றேடுமெம் மானன்பர் தேக்கவின்பம்
தருமா நடம்புரி பெம்மான் கயிலைத் தலத்தன்றக்கன்

குறிப்புரை

(காப்பு) தேம் - இனிமை, தேன்; தே - தெய்வத்தன்மையுமாம்.

காளத்தி நாதர் மலைக்கொழுந்து, ஐங்கொழுந்தென நூல்களில் வழங்கப் படுதலின் இங்கே சிவக்கொழுந்தென்றார்; "காதணிவெண் குழையானைக் காளத்தி மலைக்கொழுந்தை" (பெரிய. திருநா. 345.) இட்ட காமியமாலை யென்ற கலித்துறைநூல் நிறைவேறுதற்கு. நேமி - உலகம். தாளத்து அடைவுகொள் தாளென்று கூட்டுக; நடனஞ் செய்யும்போது தாளத்தின் அடைவை மேற்கொண்ட திருவடியென்பது பொருள்; "சதிபாய் குறுந் தாட்டு" (உரிச்சொல் நிகண்டு, காப்பு.) பாதாளக் கணபதி: ஸ்தலவிநாயகருள் ஒருவர்; இவர் அகத்திய முனிவராற் பிரதிட்டை செய்யப்பெற்றவரென் பது ஐதிஹ்யம். மேளம் - ஒரு வாத்தியம்.

தாள் துணையாமென்க.

1. திருமாலும் அயனும்; அயன் - பிரமதேவன். அன்பர் இன்பத் தைத் தேக்க வென்க. மாநடம்: இந்நடனம் பரமானந்ததாண்டவமாதலின் அன்பர் இன்பத்தைத்தேக்கும்படி தந்தது; "நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்பொழுதும், அனைத்தெலும் புண்ணெக வானந்தத்

மருமான்வில் வேடர்தங் கோமா னிடுங்கண் வலையிற்சிக்கும்
பெருமா னிடத்திற் சிறுமானென் றானையைப் பெற்றதுவே.

2. தமரக் கடலைக் கடைந்த முகுந்தன் றனக்குமெய்க்கே
பமரக்கண் ணாயிரத் தாற்குமெட் டாது பனிக்கதிர்வேற்
குமரக் கடம்பன்முன் னத்தியை யீன்ற கொடியையுங்கொண்
டமரர்க் கரசொரு கல்லா லடியி லமர்ந்ததுவே.

3. தருமந் தவஞ்சற் றறியாத வேடுவன் றன்செருப்பு
மருமுந்து வேணிக் கணிமா மலரவன் வாயுதகத்

தேன்சொரியும், குனிப்புடையான்" (திருவா. திருக்கோத்தும்பி.) கயிலைத்தலத்தன் - தென்கயிலாயமாகிய திருக்காளத்தியில் எழுந்தருளியிருப்பவன். மருமான் - மாப்பிள்ளை. வில்வேடர்தம் கோமான் இடும் - கண்ணப்பநாயனார் இட்ட. கண்வலையிற் சிக்கும் - கண்ணாகிய வலையிலே சிக்கிய; அவர் கண் இடந்து அப்ப ஆட்கொண்டமையைக் குறித்தபடி. கண் காரணமாக அவர் அன்பு வெளிப்பட்டமையின் அதனை வலையாக்கினார். கண்களையுடைய வலையிற் சிக்கும் பெரிய மானென்று வேறொரு பொருளுந் தோற்றியது; கண் - வலையின் உறுப்பு. இடத்திற் சிறுமான் - வாமபாகத்திலுள்ள சிறியமான்போன்ற உமாதேவியார். ஓர் ஆனையென்றது விநாயகரை.

வலையிற் சிக்கும் ஒரு பெரிய மானின் இடத்துள்ள சிறியமான் ஓர் ஆனையைப் பெற்றதென்றது ஒரு நயம்.

2. தமரம் கடல் - முழக்கத்தையுடைய கடல். பமரக்கண் ஆயிரத்தான் - இந்திரன்; பமரம்=பிரமரம் - வண்டு; ஆண்பாலார் கண்களுக்கும் வண்டை உவமை கூறுவது உண்டு; "வானிற் பொலிதோ கையர்கண் மலர்வண், கானிற் படர்கட் களிவண்டொடு" (கம்ப. சரபங்கர் பிறப்பு 4.) பனிக்கதிர்வேல் - குளிர்ச்சியாகிய கிரணங்களையுடைய வேலாயுதம்; அடியார்களுக்கு அநுகூலம் செய்யும் கதிராதலின் இங்ஙனம் கூறினார்; பகைவருக்குப் பனித்தலைச் செய்யும் கதிரையுடைய வேலெனலும் ஆம்; பனித்தல் - நடுங்குதல். குமரனாகிய கடம்பன்; கடம்பன் - கடம்பமாலையை அணிந்த முருகக்கடவுள். அத்தியை-யானையை; விநாயகரை. கொடி - உமாதேவியார். அமரர்க்கரசு - சிவபிரான். கல்லால்: இத்தலத்து விருட்சம்; "கல்லாலின் கீழிருந்த காபாலிகாண் காளத்தி யானவனென் கண்ணு ளானே", "கல்லாலமர்ந்தாயு நீயே யென்றுங் காளத்திக் கற்பகமு நீயேயென்றும்", "கல்லாலி னீழற்கீ ழறங்கண் டானைக் காளத்தி யானை" (தே. திருநா.)

இப்பாட்டில், கடம்பு, அத்தி, அரசு, கொடி, கல்லாலென்னும் தாவரப்பெயர்கள் ஒருங்கே வந்தமை காண்க.

3. கண்ணப்பநாயனார் பெருமை கூறப்படும். தருமமும் தவமும். மரு - மணம். வாயானது உதகத்தையுடைய திருமஞ்சனக்குடம்; உதகம் -

திருமஞ் சனக்குடம் பல்லா லவன்மென்று தின்றதசை
அருமந்த போனக மன்றோநங் காளத்தி யப்பருக்கே.

4. ஆகாச மாநட்ட மாடி பரிந்துமை யாளுறைந்த
பாகா செகத்திற் பிறவாம லுக்குன் பதந்தருவாய்
வாகா தவரு மரற்றமால் யானை வதைத்ததன்றேல்
ஏகாச மிட்ட சொருபாதென் காளத்தி யீச்சுரனே.

5. மச்சிட்ட வீடு சுடலைபன் மாலை மலரவன்கம்
நச்சிட்ட மாகிய கற்பம்வெம் பேய்படை நன்றுதின்ற
உச்சிட்டம் போனக மென்பா பரண முடைபுலித்தோல்
அச்சிட்டர் போற்றுங் கயிலையிற் காளத்தி யப்பருக்கே.

நீர். திருமஞ்சனம் - அபிடேகம். அருமந்த போனகம் - அருமருந்தன்ன உணவு.

செருப்பு மலர் வாய் குடம்: "செருப்புக் குச்சுப்புல் செவ்வாய் கலசம்" (திருக்காளத்திநாதர் கட்டளைக்கலிப்பா, 3.) வாய்குடம்: "வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்", "தூயவாய்க் கலச மாட்டி" (தே.); "வாய்கலச மூன முதம்" (திருவா. திருத்தோணோக்கம், 3); சிவானந்தலஹரியிலுள்ள "மார்கா வர்த்தித" என்னும் சுலோகத்தைப் பார்க்க. காளத்தியப்பர்: "ஆளாவதெப் படி யோதிருக் காளத்தி யப்பனுக்கே" (பட்டினத்துப்பிள்ளையார் பாடல்.)

4. ஆகாச மா நட்டம் ஆடி - சிதாகாசத்தில் பரமானந்ததாண்டவம் செய்தருள்வோய். பரிந்து - விரும்பி. பிறவாமலுக்கு - பிறவாமற் செய்தற்கு; "வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு" (காளமேகக்கவிஞர்) என்பதிலுள்ள 'குட்டாமலுக்கு' என்பதுபோல நின்றது. "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார், இறைவ னடிசேரா தார்" (குறள்) என்றலின், 'பிறவாமலுக்கு உன் பதந்தருவாய்' என்றார். வாகா - அழகுடையவனே. தவரும் - இந்திரியங்களாகிய யானைகளை வென்ற தவத்தையுடைய முனிவர்களும்; இவர் தாருகாவனத்து முனிவர் அல்லாதவர். யானை - தாருகாவனத்து முனிவர் விட்ட யானை. ஏகாசம் - மேற்போர்வை; "சிங்கப் பசுந்தோல்கொ டேகாச மிட்டும்" (தக்க. 551.) சொருபா - திருவுருவத்தையுடையாய்.

5. மச்சு - மேல்மாடம்; வழக்கு. பன் மாலை மலரவன் கம் - சொல்லப்படும் மாலை பிரமாவின் தலைகளாகும்; கற்பந்தோறும் உள்ள பிரமருடைய தலைகள் மாலையாயின. நஞ்சு இட்டமாகிய கற்பம் - விடமானது விருப்பத்துக்குரிய காயகற்பம். நஞ்சென்றது எதனை நோக்கி வலித்தது. கற்பம்- இறவாமற் செய்யும் மருந்து; "நெடுநா ளிருந்தபேரும், நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி நெஞ்சுபுண் ணுவர்" (தாயுமானவர் பாடல்.) 'தேவ ரமுதுண்டுஞ் சாவ வொருவரும், உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்த' லின் அவ்விடத்தைக் கற்பமாகக் கூறினார். பேய் படை - பேய்க்கூட்டங்

6. அணியேன்வெண் ணீறு துதியேனின் னைமெய் யன்பினுன்றாள்
பணியேனின் றொண்ட ருடனணு கேன்பெரும் பாவஞ்செய்த
திணியேன் றவமிலி யானலுங் காத்தரு டெய்வசிகா
மணியே சிவக்கொழுந் தேகயி லாய மலைக்கொழுந்தே.

7. போதுசெய் வேன்மனம் புன்மைசெய் வேனம்பிப் போந்தவர்க்குச்
சூதுசெய் வேனுந்தி தான்வளர்க் கைக்குத் தொடங்கிப்பல
தீதுசெய் வேனென் பெரும்பாவந் தானின்று தீருகைக்கிங்
கேதுசெய் வேனிறை வாதிருக் காளத்தி யீச்சுரனே.

8 அங்கணத் தாரெழுந் தற்புதத் தாமரை யாதரிப்போர்
வங்கணத் தாலெனை யஞ்சலென் பாய்மத னைச்செயித்த
செங்கணத் தாரத்ன மிட்டிமை யாநிற்குஞ் சித்ரபணிக்
கங்கணத் தாய்பொன் முகரிக்கல் லாலடிக் காளத்தியே.

கள் படைத்தொகுதிகள். நன்று தின்ற உச்சிட்டம் - கண்ணப்பர் நன்றாக மென்று தின்ற எச்சில்; "பல்லா லவன்மென்று தின்றதசை, அருமந்த போனகம்" (3) என்றார் முன்னும். என்பு ஆபாணம். அச்சிட்டர்- சிவகோசரியார் முதலிய அந்தச் சிஷ்டர்கள். அ: நெஞ்சறிசுட்டு; பண்டறி சுட்டுமாம்.

6. வெண்ணீற்றை அணியேன். திணியேன் - திண்ணியேன்; மனவன்மையை யுடையேன்; "கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென் கன்னெஞ்ச முருகவிலையே" (தாயுமானவர்) என்பது காண்க. சிவக் கொழுந்து: காப்புச் செய்யுளைப் பார்க்க. மலைக்கொழுந்து: "காளத்தி மலைக்கொழுந்தை" (பெரிய. திருநா. 345.)

7. போதுசெய்வேன் - தாமதம் செய்வேன்; நின்னைப்பணிதல் முதலிய செயல்களைச் செய்யாமல் வீணே பொழுதைக் கழிக்கின்றே னென்பது கருத்து. மனம் புன்மை செய்வேன் - மனத்தின்கண் புல்லிய எண்ணங்களை எண்ணுவேன். சூது - வஞ்சகம். உந்தி - வயிறு. உந்தி வளர்க்கைக்கு: "சாணும் வளர்க்க வடியேன் படுதுயர் சற்றலவே" (பட்டினத்தார் பாடல்.)

8. அம் கணத்தார் - அழகிய அடியாராகிய திருக்கூட்டத்தினர். அற்புதத் தாமரை - ஞானவாசனையையுடைய திருவடியாகிய தாமரை. ஆதரிப்போரது வங்கணத்தால்; வங்கணம் - நட்பு. நான் வேறு குணமிலேனாயினும் அன்பர் கூட்டத்தின் நட்புடைமையினால் என்னை அஞ்சலென்பாயாக வென்றார். மதன் - காமன். செங்கண் அத்தா: எரிவிழியாதலின் செங்கணென்றார். ரத்னம் இட்டு - மாணிக்கத்தைப் பொதிந்து. இமையா

9. பெருக்க மலக்குடி லைப்பேணி யேயுழல் பித்தனென்னைச்
சுருக்க மனம்பொறுத் தாளுவ மென்மிடி தூளெழப்பார்
மருக்கம லத்துறை வேதற்கெட் டாத வடிவினனே
எருக்க மலர்ச்சடை யாய்திருக் காளத்தி யீச்சுரனே.

10. பெண்ணப்பன் வேள்வி தனிலே யுகந்து பெருகப்பிடித்
துண்ணப் புகுந்த சுரரையெல் லாந்துரந் தோடச்செய்தாய்
விண்ணப்ப மொன்றுண்டு கேளடி யேன்மெய்ப் பிணிகளைவாய்
கண்ணப்ப னெச்சி லுகந்தவ னேதிருக் காளத்தியே.

11. துறைவாரி நஞ்சண்ட கோளத்தை முட்டத் தொடங்கியநாள்
நிறைவா னவர்களுந் தாமிற வாமன்முன் னின்றதுபோற்
பிறைவார் சடைமுடிப் பிஞ்ஞக னேயென் பிணிதொலைப்பாய்
இறைவா வுனைநம்பி னேன்றிருக் காளத்தி யீச்சுரனே.

12. பாலினுண் டான சுவைமட்கி நஞ்சம் பரந்ததுபோல்
வாலிப ரூபஞ்சிங் காரத்தின் றீமை மயக்கிடவென்

நிற்கும் - விளங்கும். சித்ரபணி - அலங்காரமாகிய பாம்பு. பொன்முகரி: இத்தலத்தில் ஓடும் நதி. கல்லால்: 2-ஆம் செய்யுட் குறிப்புரையைப் பார்க்க. காளத்தி யென்பதே இத்தலத்துச் சிவபெருமானுக்கு ஒரு திருநாமம்; "கருநிலவு கண்டனைக் காளத்தியை", "கானகத்துக் கருங் களிற்றைக் காளத்தியை" (தே. திருநா.); இந்நூல் 10-ஆம் செய்யுளைப் பார்க்க.

9. பெருக்க - உருவத்திற் பெரிதாகும்படி. மலக்குடில் - அழுக்கு நிறைந்த குடிசை போன்ற உடல். சுருக்க - சுருங்கும்படி. மிடி - வறுமை. தூள் எழ - அழிய. மரு - நறுமணம். வேதன் - பிரமதேவர். எருக்கமலர்ச் சடை: "துன்னியவூ ரினும்விரைசார்ந் தறியாத புல்லெருக்குஞ் சூடிக் கொண்டாய்" (வாட்போக்கிக் கலம்பகம், 99.)

10. பெண் அப்பன் - மாமன்; என்றது தக்கனை. உண்ணப் புகுந்த - அவியை உண்ணவெண்ணிச் சென்ற. துரந்து - ஓட்டி. திருக்காளத்தி: 8.

11. துறைவாரி நஞ்சு - துறைகளையுடைய கடலிற் பிறந்த ஆலகால விடம்; எழுவாய். முட்ட - வருத்த. முன்னின்றதென்றது பாதுகாப்பாக நின்றமையைக் குறித்தபடி.

12. மட்கி - கெட்டு. வாலிப ரூபம் - இளைய மகளிர் உருவம்; வாலிபம்: வழக்கு. ரூபமும் சிங்காரத்தின் தீமையும். பிணிதனின் -

மேலினில் வந்திடும் பொல்லாப் பிணிதனின் மீட்டருள்வாய்
சேலுகள் வாவி செறிகயி லாயச் சிவக்கொழுந்தே.

13. நெருப்புக் குகையைப் புழுமொய்க்கு மோவிந்த நீணிலமேல்
இருப்புக் கபாடத்தைச் செல்லெய்து மோவிமை யோர்க்கரசே
விருப்புற்றுன் ருளைத் தியானித்த பேர்க்கு மிடிவருமோ
செருப்புச் சடையண்ண லேகயி லாயச் சிவக்கொழுந்தே.

14. நொச்சியுங் கொன்றையுஞ் சூழ்சடை யாயென்னை நோவுசெய்யும்
மெய்ச்சிலு கான பிணிதொலைப் பாயன்று வேடனிட்ட
எச்சிலுந் தின்று பசியுங் கெடாம லிருந்தென்மனக்
குச்சி லுறைபவ னேகயி லாயச் சிவக்கொழுந்தே.

15. சிந்தை வியாகுலந் தந்தடி யேன்மெய்யிற் றீங்குசெய்யும்
இந்த வியாதி தனைக்களை வாயியற் சுந்தரனு
கந்தவி யாமற் பரவைக்குத் தூதுசெல் காரணனே
தந்த வியாளப் பணியாய்கை லாயச் சதாசிவனே.

16. எலிதான் கலக்கண்ணி னீர்களிற் பூனை யிரங்குமதோ
கிலிதான் பிடித்து மனமே தியங்கிப்பற் கெஞ்சியிட்டால்
வலிதாய பாவம் விடுமோதென் காளத்தி வானவனம்
புலிதாழ் சடையன் கடாட்சமுண் டாயிடிற் போய்விடுமே.

நோயினின்றும். சேல் உகள் - சேல் மீன்கள் துள்ளுகின்ற. சிவக்கொழுந்து : காப்புச் செய்யுளைப் பார்க்க.

13. நெருப்புக்குகை - உலோகங்களை உருக்கும்பொருட்டு நெருப்பினுள் வைக்கப்படும் ஒரு கருவி; "கருமருவு குகையனைய காயத்தி னடுவுட் களிம்புதோய் செம்பனையயான்" (தாயுமானவர் பாடல்.) இருப்புக் கபாடம்- இரும்பாற் செய்யப்பட்ட கதவு. செல்- கறையான். இமையோர்க் கரசே : "அமரர்க் கரசு" (2.) செருப்பு - கண்ணப்பநாயனுரது செருப்பு.

14. சிவபெருமான் நொச்சியை அணிந்தமை: "நொச்சியம் பச்சிலையான்" (தே. சுந்தர. நன்னிலத்துப்பெருங்கோயில்.) சிலுகு - சண்டை; "கலைகற்ற பேய்களொடு சிலுகிட் டொலாவுமன" (அஞ்ஞவதைப்பரணி.) வேடன் - கண்ணப்ப நாயனுர். குச்சில் - குடிசையில்.

15. சுந்தரன் ஆகம் தவியாமல்; ஆகம் - மனம். பரவை - பரவை நாச்சியார். வியாளப்பணி - பாம்பாகிய ஆபரணம்.

16. கண்ணிற் கலநீர்களில் - கண்ணிலிருந்துவிடும் கலநீரால்; "மன்ற கலகங்கல னேதுணி கட்புனல்" (மூல்லையந்தாதி, 28.) கிலி - பயம்; வழக்கு. அம்புலி தாழ் - பிறைதங்கிய. பாவம் போய்விடும்.

17. மேலடி வைக்குஞ் சினமாறன் றன்சுர மீட்டகதை
போலடி யேன்மெய்ப் பிணிகளை வாயண்டர் போற்றநெடு
மாலடி தேட வயன்முடி தேட மறைந்தொருகல்
லாலடி தேடி யமர்தரு காளத்தி யாண்டவனே.

18. கோழைச் சவலை யடியேனைக் காத்தருள் குற்றமிலா
மாழைச் சயிலத் தனுவுடை யாயுன்னை வாழ்த்தப்பொரு
மோழைச் சமணைக் கழுவேற் றிேறற்கு முலைகொடுத்த
ஏழைச்சி பங்கின னேதிருக் காளத்தி யீச்சுரனே.

19. நாவுக் குருசி தனைத்தேடிப் பல்லுயிர் நாடியந்த
ஆவுக்குத் தீங்குசெய் யும்பஞ்ச பாதக ேனமென்றனைக்
கோவித்துக் கீழ்நர கிற்படுத் தாமற் குறித்தருள்வாய்
காவித் தடவயல் சூழ்கயி லாபுரிக் காளத்தியே.

20. மாரக் கடம்பனைப் பெற்றகண் ணுவனை வாழ்த்துமென்மேற்
கோரப் பிணிகெடப் பார்த்தருள் வாய்நின்சொற் குற்றமென்ற
கீரற்கு நின்சொரு பங்காட்ட வேண்டிக் கிளைத்தெழுந்த
ஈரச் சடாமுடி யாய்திருக் காளத்தி யீச்சுரனே.

---

17. மேல் அடிவைக்கும் மாறன் - தன்மேல் பிரம்படியை வைத்த பாண்டியன்; இவன் அரிமர்த்தனபாண்டியன். சுரமீட்டது கூன்பாண்டியனுக்காயினும், அவன் முன்னோன் செயலையும் அவன் செயலாகக் கூறினார். அண்டர் - தேவர்.

18. கோழை - பயத்தையுடையவன். சவலை - ஏமாந்து நிற்பவன், ஆதரவற்றவன்; "சவலையாய் நாயேன் கழிந்து போவேனோ" (திருவா.) மாழைச் சயிலத் தனு - பொன்மலையாகிய வில். மோழை - அறிவின்மை. ஏற்றினோன்: திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். ஏழைச்சி - பெண். 'ஏழைபங்காளன்' என்பதை நினைப்பிக்கின்றது.

19. ஆவுக்கு - உயிருக்கு.

20. மாரக் கடம்பனை - மன்மதனைப்போன்ற திருவுருவத்தையுடைய முருகக்கடவுளை; மாரன் - மன்மதன். சிவபெருமான் திருவிழிகளில் உண்டாகிய பொறியிலிருந்து முருகக்கடவுள் உற்பவித்தாராதலின், 'கடம்பனைப் பெற்றகண்ணு' என்று கூறினர். கோரம் - கொடுமை. நின்சொற்குற்றமென்ற கீரன்- தருமியின் பொருட்டுப் பாடித்தந்த "கொங்குதேர் வாழ்க்கை" என்ற செய்யுள் பொருட்குற்றமுடையதெனக் கூறிய நக்கீரர். நக்கீரர் இத்தலத்தில் வழிபட்டுச் சிவபெருமானை அவமதித்த பாவந் தீர்ந்தாராதலின் இது கூறினர். நக்கீரரோடு வாதிடுகையில் சடைமுடி, நெற்றிக்கண் முதலியவற்றோடு தம் திருவுருவத்தைக் காட்டினாரென்றும், கீரர் பின்னும் அஞ்சாது, "சடைகொடு வெருட்டல் வேண்டா" என்று கூறினாரென்றும் திருவிளையாடற்புராணம் உரைக்கும். ஆதலின் இங்கே, 'நக்கீரருக்கு நின் திருவுரு

21. நின்பணி தன்னின் முயலேனின் னுமை நினைந்தருள்வார்
முன்பணி யேன்றிரு நீறணி யேன்வஞ்ச மூர்க்கனியான்
மின்பணி தொண்டர் தலைமண்டை கொண்டது மீட்டதுபோல்
என்பிணி யைக்களை வாய்திருக் காளத்தி யீச்சுரனே.

22. வீணுந் தகைமையு மேம்பாடுங் கற்று மிகவுமன்று
சாணுந்தி பேணித் திரிதனன் றேசெஞ் சடாமுடியும்
பூணுமுந் நூலுந் திருமார்புந் தூக்கிய பொற்பதமும்
காணும் பதந்தரு வாய்கயி லாபுரிக் காளத்தியே.

23. தூற்று மருந்தும்பொய் சோலை மருந்தும்பொய் சூழ்கடலில்
ஏற்று மருந்தும்பொய் மானிடர் காளஞ் செழுத்தையன்பாற்
சாற்று மருந்தவ மில்லாத வன்மெய் தனிற்பிணியை
மாற்று மருந்தென் கைலாய மேய மலைமருந்தே.

24. பணிக்கு மருந்து கருட னலாதில்லை பாரிலிருள்
அணிக்கு மருந்து தவனன லாதில்லை யானபசி
தணிக்கு மருந்தன்ன தானமல் லாதில்லை சாற்றுகிலென்
பிணிக்கு மருந்து கயிலாய ரன்றிப் பிறரில்லையே.

வத்தைக் காட்ட வேண்டித் தோற்றுவித்த சடைமுடியையுடையாய்' என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

21. பணி - திருத்தொண்டு. மின்பணி தொண்டர்........மீட்டது: இவ்வரலாறு இப்போது விளங்கவில்லை.

22. வீண் - பயனற்ற விஷயங்கள். தகைமை - தகுதியுடைய செயல்கள். மேம்பாடு - மேன்மை. நன்மையும் தீமையும் கலந்து கற்றேனென்றபடி. சாண் உந்தி - சாணளவாகிய வயிறு; "சாணும் பிழைக்க" (பட்டினத்துப்.) தூக்கிய பொற்பதம் - குஞ்சிதசரணம். பதம் தருவாய் - பதவியை அருள்வாயாக.

23. தூற்றும் மருந்து - துளிக்கும் திரவரூபமான மருந்து; மாத் தூற்றிலுள்ள பட்டை முதலிய மருந்தெனலும் ஆம். சோலை மருந்து - சோலையில் வளரும் மூலிகையாகிய மருந்து. கடலில் ஏற்று மருந்து - அமுதம். பொய்யென்றது நிலையான பரிகாரத்தைச் செய்யா வென்னும் கருத்தினது. மலைமருந்து: காளத்திநாதர் திருநாமங்களுள் ஒன்று; "அங்கண் மாமலை மேன்மருந்தை வணங்கி", "அயன்மா றேடும், மருந்துவெளி யேயிருந்த திருக்கா ளத்தி மலையடிவா ரஞ்சார வந்து தாழ்ந் தார்", "திருமுன் சென்றெய்தி மலைமேன் மருந்தை வணங்கினார்" (பெரிய. திருநா. 348, திருஞா. 1021, ஏயர்கோன். 196.)

24. பணிக்கு - நாகத்திற்கு. மருந்து - பரிகாரம். இருள் அணி - இருளாகிய படை. தவனன் - சூரியன்.

25. நெஞ்சடை யாமுன் னினைவழி யாமுன் னெடும்புலன்கள்
அஞ்சடை யாமுன் னறிவழி யாமு னயர்ந்துகண்கள்
பஞ்சடை யாமுன் னடியேனைக் காத்துன் பதந்தருவாய்
செஞ்சடை யாய்பர மாகயி லாயச் சிவக்கொழுந்தே.

26. தீக்கிரை யாயெறும் புக்கிரை யாய்மண் டினற்கிரையாய்
நாய்க்கிரை யாய்வன் னரிக்கிரை யாயுட னுன்சுமந்தேன்
வாய்க்கிரை தேடி வருந்தாம லாண்மன் மதனையுங்கட்
டீக்கிரை யாக்கிய தேவே கயிலைச் சிவக்கொழுந்தே.

27. குச்சித்த நன்னெறி யில்லாத வன்வெய்ய கோபனின்பால்
மெய்ச்சித்த மற்றவ னுனுலுங் காத்தருள் வேதப்பிரான்

---

25. நெஞ்சு அடையாமுன் - கபத்தினுல் தொண்டை அடைத்துக் கொள்வதற்குமுன். நினைவு - ஞாபகம். நெடும்புலன்கள் - நீண்ட காலமாகப் பல நுகர்ச்சிகளை நுகர்ந்த பொறிகள்; புலன்கள்: இங்கே, ஆகுபெயர். அடையாமுன் - அடைப்பதற்குமுன்; "ஒக்க வடைக்கும்போ துணர மாட்டேன்" (தே. திருநா. திருப்புகலூர்.) கண் பஞ்சடைதலா வது ஒளி மழுங்குதல்; "காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே" (பட்டினத்தார் பாடல்.) இச்செய்யுளில் மரணசமயத்தில் உண்டாகும் அறிகுறிகள் சொல்லப்பட்டன. கயிலாயம் - தட்சிணகைலாசமாகிய காளத்தி.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மே லுந்தி, அலமந்த போதாக" (தே. திருஞா. திருவையாறு.) என்பது காண்க.

26. இறந்தபிறகு உடல் தீமுதலியவற்றுக்கு இரையாதல் கூறப்படும்.

இந்த உடலை நான் பாதுகாத்துச் சுமந்தாலும் இறுதியில் எனக்குப் பயன்படுதலின்றித் தீ முதலியவற்றிற்கு இரையாகிக் கழியும் என்றூர். வருந்தாமல் ஆள்வாயாக.

இந்தச் செய்யுளின் கருத்தோடு, "எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கென்னு மிந்தமண்ணும், சரியெனக் கென்னும்" (பட்டினத்தார் பாடல்), "நாய்நம தெனநரி நமதெ னப்பிதாத், தாய்நம தெனநமன் றனதெ னப்பிணி, பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோல், ஆய்நம தெனப்படும் யாக்கை யாரதே" (திருவிளை. இந்திரன். 32) என்பவை ஒப்புநோக்கற் பாலன.

27. குச்சித்தன் - இழிந்த சித்தத்தை யுடையவன். வேதப் பிரான் - பிரமதேவர். பிரமாவின் தலைகளில் நடுத்தலை தன்னை இகழ்ந்

உச்சித் தலைகொய் தவனேகண் ணப்ப னுமிழ்ந்ததசை
இச்சித் தமுதுசெய் தோனேதென் காளத்தி யீச்சுரனே.

28. நேர்ந்தாரை வாழ்வித்து நேராரைத் தாழ்விக்கு நின்மலனே
பூந்தாரை யிந்து முடித்தவ னேயுனைப் போற்றிவந்து
சேர்ந்தேனை வாழ்வித்தென் மெய்யிற் பிணிதனைத் தீர்த்தருள்வாய்
சார்ந்தாரைக் காப்பவ னேகயி லாபுரிச் சங்கரனே.

29. அப்புரத் தத்தசை யென்பாற் சமைத்தவென் னாகத்துற்ற
துப்புரத் தைக்குலைக் கும்பிணி தீர்த்தருள் சோபனனே
செப்புரத் திற்பெண் ணழுத்துங் கணையுஞ் சிலையுங்கொண்டு
முப்புரத் தைச்செற்ற காளத்தி யீச முழுமுதலே.

30. நாகரை யாகத்திற் பூண்டவ னேயந்த நாட்புரத்தைச்
சேகரை யாடலிற் செற்றவ னேமலர்த் தேமுதலாம்
மாகரை யாளும் பரனேயென் மெய்ப்பிணி மாற்றிவலி
யேகரை யாமல்வைப் பாய்திருக் காளத்தி யீச்சுரனே.

தமையின் அதனை இறைவன் கொய்தனனென்பது புராணவரலாறு. வேதப்பிரானாயினும் அவன் தன்னை இகழ்ந்தவழி ஒறுத்தும், வேடனாயினும் தன்னைவழிபட்டவிடத்து அவன் வழிபாட்டை ஏற்றுக்கொண்டும் அடியார்க்கு எளியனாந் தன்மையுடையவனாயினனென்று புலப்படுத்தியபடி.

28. நேர்ந்தாரை - தன்பால் அன்பு பூண்டவரை. நேராரை - பகைவர்களை. தாழ்வித்தாலும் அச்செயல் அவர் நன்மைகருதிய மறக்கருணையின் பாற் படுதலின், அடுத்து நின்மலனேயென்றார். சிட்டபரிபாலனமும் துட்டநிக்கிரகமும் உடையானென்றபடி. பூந்தாரை இந்து - பொலிவுபெற்ற நட்சத்திரங்களையுடைய சந்திரனை. தாரகணமென்று நட்சத்திரக் கூட்டத்தைக் கூறுவர். முடித்தவனே - சிரத்தில் சூடியோய்.

29. அப்பினது அம்சத்தையுடைய ரத்தத்தாலும் தசையாலும் என்பாலும் உண்டாக்கிய என் உடம்பென்க. என் ஆகத்துற்ற பிணி, குலைக்கும் பிணியென்க. துப்பையும் உரத்தையும் குலைக்கும்; துப்பு - தூய்மை; உரம் - வன்மை. சோபனன் - திவ்யமங்கள மூர்த்தி. செப்பு உரத்தில் பெண் அழுத்தும் கணையும் - புகழையுடைய திருமார்பில் திருமகளைப் பதித்த திருமாலாகிய அம்பையும். சிலையும் - மேருமலையாகிய வில்லையும்.

30. நாகரை - பாம்புகளை. ஆகத்தில் - திருமேனியில். பூண்டவனே - ஆபரணமாக அணிந்தோய். அந்த: பண்டறிசுட்டு. புரத்தையும்

31. கூற்ற நமனை யுதைத்தவ னேவெங் கொடியபுலித்
தோற்றங் கரையுள்ள சோதியென் னோவைத் தொலைத்தருள்வாய்
போற்று நரையுகந் தாள்பவ னேதெய்வப் பொன்முகரி
யாற்றங் கரையி லமர்ந்தருள் காளத்தி யற்புதனே.

32, 33, 34. * * * * *

35. வெங்களை மூடி முளைதனில் வாடுமென் மெய்ப்பிணிநீத்
தங்களைந் தேயெனை யாண்டருள் வாய்கொன்றைத் தாரினையும்
திங்க ளையுமர வங்களை யுந்திருத் தார்களையும்
கங்களை யுங்கட்டு செஞ்சடை யாய்திருக் காளத்தியே.

36. பல்லாலொர் மாத்தசை மென்றிட்ட வற்குன் பதமளித்தாய்
வில்லா லசுரரைச் செற்று யெனது மிடிதொலைப்பாய்
சொல்லா லமரர் துதிக்குங் கயிலைச் சுடர்க்கொழுந்தே
கல்லான் மரத்தி னிழலுறை வாய்திருக் காளத்தியே.

அவற்றிலிருந்த சேகரையும்; சேகர் - குற்றத்தையுடைய அசுரர்; சேகு - குற்றம். ஆடலின் - விளையாட்டைப்போல. திரிபுரம் எரித்தது இறைவனுக்கு ஒரு விநோதார்த்தமாகவே இருந்ததென்றபடி. மலர்த் தே - பிரமதேவர். மாகர் - வானவர்; தேவர். வலியே கரையாமல் - ஆற்றல் குறையாமல்.

31. கூற்றம் நமனை - உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவனாகிய யமனை. புலித்தோல் தங்கு அரை; அரை - இடை. பொன் முகரியாறு இத்தலத்தில் ஓடுவது. அற்புதன் - ஞானமூர்த்தி.

32, 33, 34. இம் மூன்று செய்யுட்களுமுள்ள ஏடு கிடைக்கவில்லை.

35. களை - பயிரினிடையே தோன்றும் களை. தம்மை இளம்பயிராக உருவகம் செய்தார். பிணி நீத்தம் களைந்தே - நோயாகிய வெள்ளத்தைப் போக்கி; மிகுதிபற்றி நீத்தமென்றார். அரவங்களையும் - பாம்புகளையும். திருத்து ஆர்களையும் - திருத்தப்பெற்ற ஆத்திமாலைகளையும். கங்களையும் - தலைகளையும்.

36. மா - பன்றியது. மென்று இட்டவற்கு - கண்ணப்பநாயனாருக்கு. அசுரர் - திரிபுரத்தில் இருந்த அசுரர்கள். மிடி - வறுமை. கல்லால், இத்தலவிருட்சம்.

37. பெரும்புனல் கொன்றை சிறுபிறை சூடிய பிஞ்ஞகனே
இரும்பனைப் பித்தனை யாகாமற் காத்தரு ளேமனென்னும்
துரும்பனைத் தூணி லவதரித் தேசெற்ற சோதிபெற்ற
கரும்பனை வெம்பொடி செய்தவ னேதிருக் காளத்தியே.

38. அருமந்த வாலிப மெல்லா நடுங்கவென் னுகந்தன்னில்
வருமந்த மான பிணிதொலைப் பாய்நச்சு வாயரவம்
தருமந்த மாணிக்கந் தன்னைக்கை யாலள்ளித் தன்கதிராற்
கருமந்தி செம்மந்தி யாகுங் கயிலையிற் காளத்தியே.

39. நேமியன் றன்னைக் கலையாக்கி யிந்தை நிலத்தரைத்துத்
தோமிய றக்கன் றலைவெட்டிப் பாரதி துண்டங்கொய்து
மாமிதன் காதை யரிந்தவ னேயென் மனத்துக்கிட்ட
காமியந் தந்தருள் வாய்கயி லாபுரிக் காளத்தியே.

---

37. பெரும்புனல் - கங்கை. இரும்பனை - இரும்புபோன்றவலிய நெஞ்சையுடைய என்னை; "இரும்புதரு மனத்தேனை" (திருவா.) பித்து அனை ஆகாமல் - சிற்றின்பத்தில் ஈடுபடும் பித்து அனைந்தவனாகாமல். இரும்பாகிய என்னைப் பித்தனையாகாமல் காப்பாயாகவென வேறொரு பொருள் தோற்றியது. ஏமன் - இரணியன்; ஏமம் - பொன். துரும்பனை - துரும்பு போன்றவனை; "வெறும், துரும்பனே னென்னினும்" (தாயுமானவர் பாடல்.) சோதி - நரசிங்க மூர்த்தி. அவர் பெற்ற கரும்பன், மன்மதன்; கரும்பன் - கரும்பாகிய வில்லையுடையவன். வெம்பொடி - வெவ்விய நீறு.

38. அருமந்த - அருமருந்தன்னவென்பதன் மரூஉ; "அருமந்த வர சாட்சி வரிதோமற் றெளிதோதான்" (பெரிய. திருவாரூர்ச்.) வாலிபம் - இளமைப்பருவம்; வழக்கு. வரும் மந்தமான பிணி. தரும் அந்த மாணிக்கம். தன் கதிரால் - அந்த மாணிக்கத்தின் கிரணங்களால். மாணிக்கம், செந்நிற முடையதாதலின் அதன் கதிர் வீசியதால் கருமந்தி செம்மந்திபோலத் தோற்றியது.

39. தக்கயாக சங்காரத்தில் நிகழ்ந்த செயல்கள் கூறப்படும்.

நேமியன் - சக்கரபாணியாகிய திருமால்; நேமி - சக்கரம். இங்கே திருமாலின் அம்சமாகி யக்ஞபுருஷனைக் கொள்க. கலை - கலைமான். தக்க யாகசங்காரத்தில் யக்ஞபுருஷன் மானுருவந் தாங்கி ஓடினனென்பது புராணவரலாறு; "மகத்தின் றெய்வதம், பிணையென வெருக்கொடு பெயர்ந்து போதலும்" (கந்த. யாகசங்கார. 37.) இந்தை - சந்திரனை. பாரதி துண்டம் - கலைமகளது நாசியை. இட்ட காமியம் - விரும்பிய பொருளை.

40. காமத் தளவின் முயல்பஞ்ச பாதகன் கள்வன்செயும்
தோமத் தனையு மிடியத் தனையுந் தொலைத்தருள்வாய்
சேமத்தைச் சேர்சடைப் பாகீ ரதிபொங்கிச் சிந்தச்சிந்த
ஈமத் திருநடஞ் செய்பவ னேயெழிற் காளத்தியே.

41. குலைமதி யென்றுளம் பேணேன் விரகக் கொடுமையிற்பட்
டலைமதி கேட னெனினு மடியனை யாண்டருள்வாய்
விலைமதி யாத கழையீன்ற முத்தம் வெயிலைத்தள்ளிக்
கலைமதி காட்டுங் கயிலாய மாமலைக் காளத்தியே.

42. புழைக்கை மலைவெங் கராவாயிற் பட்டுப் புராதனவென்
றழைக்கும் பொழுதரி காத்தது போலெனை யஞ்சலென்பாய்
உழைக்கண் பிதுங்கப் புலிதண்டை மோத வுறவினர்போல்
கழைக்கண்கள் முத்துதிர்க் குங்கயி லாபுரிக் காளத்தியே.

43. பண்ணிடந் தான்செவி யாகிடப் பாணர்ப் பரித்தவனே
பெண்ணிடந் தான்வைத்த பிஞ்ஞக னேயென் பிணிதொலைப்பாய்

---

40. காமத்து அளவில் முயல் - காமநுகர்ச்சிமாத்திரத்தில் முயற்சிகளைச் செய்கின்ற. தோம் அத்தனையும்; தோம் - குற்றம். மிடி - வறுமை. சேமம் - பாதுகாப்பு. பாகீரதி - கங்கை. ஈமத் திருநடனம் செய்பவனே - சுடலையில் அழகிய தாண்டவத்தைச் செய்தருள்வோய்.

41. குலைமதி என்று உளம் பேணேன் - என்பாவத்தை அழிப்பாயாக என்று வேண்டி நின்னை என் மனத்தின்கண் வைத்துப் போற்றுதலைச் செய்யேன்; மதி: முன்னிலையசை. விரகமென்றது இங்கே காமதாபத்தை. கழையீன்ற முத்தம் - மூங்கில்கள் உதிர்த்த முத்துக்கள். கலைமதி - கலைகளையுடைய சந்திரனது குளிர்ச்சியை.

42. புழைக்கைமலை - யானை; என்றது கசேந்திரனை. கரா - முதலை. புராதன - ஆதிமூலமே. அரி - திருமால். உழைக்கண் பிதுங்க - மானினது கண் அச்சத்தால் விழி பிதுங்க. தண்டை - வாலை. புலி வாலைத் தரையில் மோதியமாத்திரத்தில் மான்கள் அஞ்சி விழிபிதுங்கின. கழைக் கண்கள் முத்து உதிர்க்கும் - மூங்கிலின் கணுக்கள் முத்துக்களை உதிரும்படி செய்யும்; மானின் நிலைகண்டு இரங்கிக் கண்ணீர்த்துளிகளை உதிர்க்குமென்று வேறொரு பொருள் தோற்றியது. முத்து உண்டாகும் இடங்களில் மூங்கில் ஒன்று.

43. பண் இடம் - பண்கள் தோற்றுவதற்குரிய இடம். தான்: அசைநிலை. பாணர்ப் பரித்தவனே - இசைவாணர்களைத் தாங்கியவனே. சிவ

MAHAMAHOPADHYAYA DR U.V. SWAMINATHA IYER LIBRARY THIRUVANMIYUR MADRAS 41

மண்ணிடந் தானயன் காணாத நின்றன் வடிவையெல்லாம்
கண்ணிடந் தானுக் கிருப்பாக நல்கிய காளத்தியே.

44. அல்விளக் குந்திங்க ளங்கமுந் தேயச்செல் லாதவதனார்
பல்விழக் கண்டவ னேயெனை யாண்டருள் பைந்தொடியார்
இல்விளக் கப்புது மாலைக்கு நாகங்க ளீன்றவைத்த
கல்விளக் கேற்றுங் கயிலாய மாமலைக் காளத்தியே.

45. சிலம்பார்க்கத் தூது நடந்தவ னேயென்றன் சிந்தைவியா
குலம்பாற்றி மெய்யிற் பிணிகளை வாய்பெருங் கோலவெண்ணித்
திலம்பார்த் தெடுத்தரி பற்காட்டுங் கொள்கை சிறுபடிமக்
கலம்பார்ப்ப தொக்குங் கயிலாய மாமலைக் காளத்தியே.

46. செல்வைத்த புற்றிற் பணிவந்த தென்னமெய் தேம்பச்சொட்டைச்
சொல்வைத் துறையும் பிணிதொலைப் பாய்புனஞ் சூழ்கிளியை

பெருமான் தம் திருக்காதில் இரண்டு கந்தருவர்களைத் தோடாகத்தரித் தருளினரென்பது வரலாறு; "தோடுவார் காதன்றே தோன்றாத் துணையை யர், பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே" (திருப்பாதிரிப்புலியூர்க் கலம் பகம்.) மண் இடந்தான் - பூமியைத் தோண்டினவனாகிய திருமால். இடந்தானும் அயனும். கண் இடந்தானுக்கு - கண்ணப்ப நாயனாருக்கு.

44. அல் விளக்கும் - இரவை நீக்கி நிலவால் விளக்குகின்ற. ஆதவனார் - சூரியன்; பன்மை, இகழ்ச்சிக்குறிப்பு. தக்கயாக சங்காரத்தின் போது சிவபெருமான் சந்திரனைத் தேய்த்துச் சூரியனது பல்லைத் தகர்த்தன ரென்பது வரலாறு. மகளிர் மாலைக்காலத்தில் விளக்கேற்றுதல் மரபு. இல் விளக்க - வீடுகளுக்கு விளக்கம் உண்டாக்கும்பொருட்டு. புதுமாலைக்கு - புதுமையையுடை மாலைப்பொழுதுக்கு; முல்லைமலர்தல் முதலிய புதுமையை உடைமையின் புதுமாலையென்றார். கல்விளக்கு - மணியாகிய விளக்கு. பைந்தொடியார் விளக்கேற்றும் என்க.

45. சிலம்பு ஆர்க்க. சிவபெருமான் வேதத்தைச் சிலம்பாக அணிந் தனரென்பது வரலாறு. தூது நடந்தது சுந்தரமூர்த்தியாருக்காகப் பரவை யினிடம் சென்றதைக் குறித்தது. வியாகுலம் - துயரம். பாற்றி - போக்கி. கோல வெண் நித்திலம் - அழகிய வெண்மையான முத்துக்களை. அரி - குரங்கு. சிறு படிமக்கலம் - சிறிய கண்ணாடி. கண்ணாடி பார்ப்பார் பல்லைத் திறந்து பார்த்தல் இயல்பு.

46. செல் - கறையான். பணி - பாம்பு. தேம்ப - வருந்த, சொட் டைச்சொல் - பழிமொழி. வில்வைத்த - வில்லைப்போன்ற. கவண் - கிளி

வில்வைத்த நன்னுதல் வேடிச் சியர்கவண் மீதுரத்னக்
கல்வைத்து வீசுங் கயிலாய மாமலைக் காளத்தியே.

47. நண்டா னதுகட்டும் வானரம் போல நடுங்கியுள்ளம்
திண்டாட வந்தெனைச் சாதிக்கு மெய்ப்பிணி தீர்த்தருள்வாய்
அண்டாத மாலயன் முன்முத லான வமரர்குழாம்
கண்டா தரிக்குங் கயிலாய மாமலைக் காளத்தியே.

48. மிடிக்கே யலுத்து மெலிகின்ற பாதகன் மீண்டுமிந்தக்
கடிக்கே யிளைத்துமெய் நோவாமற் காமின் கனத்தனத்தார்
மடிக்கே கிடத்த வுழல்கின்ற மாயன் வணங்கக்கல்லால்
அடிக்கே யுறைந்த பரனேதென் காளத்தி யற்புதனே.

49. நிரைப்பண் ணளியிசை மேவிய பூங்குழ லேனிழைமா
தரைப்பின் றொடர்ந்து துயர்படு வேனெனைத் தாங்கியருள்
திரைப்பெண்ணைத் தாங்கு சடையாய் திருவுந்திப் பொன்முகரிக்
கரைப்புண்ணி யாபர மாகயி லாபுரிக் காளத்தியே.

* * * * * * *

கடி கருவிகளுள் ஒன்று. கவணில் ரத்தினத்தையே கல்லாக வைத்து வீசிக் கிளியை ஓட்டினர்.

47. நண்டுக்குக் குரங்கு அஞ்சும். கட்டும் - கட்டப்பெற்ற. திண்டாட: "திண்டாட வெட்டி விழவிடுவேன்" (கந்தரலங்காரம்.) சாதிக்கும் - துன்புறுத்தும், அண்டாத - அணுகவொண்ணுத. ஆதரிக்கும் - அன்பு செய்யும்.

48. மிடி - வறுமை. அலுத்து - இளைப்புற்று; "அலுத்தே னடியேனதிகைக் கெடில வீரட் டானத் துறையம் மானே", "அலுத்தே னடியேனை யஞ்சலென்னுய்" (தே. திருநா. திருவதிகை, திருவாவடுதுறை.) கடி - மேகநோய். கா - பாதுகாப்பாயாக. மின்னுகின்ற பாரமாகிய நகிலையுடையார். மடிக்கே கிடத்த - குழந்தையாகக்கொண்டு பாலூட்டுதற்கு மடியின்கண் படுக்கவைக்க. உழல்கின்ற - பிறவியெடுத்துத் திரிகின்ற. பல தாயர் வயிற்றிற் பிறந்து பிறந்து திரிகின்ற திருமாலென்றபடி.

49. நிரைப்பண் அளி - வரிசையாகிய பண்களைப் பாடும் வண்டுகள். தாங்கி - பாதுகாத்து. திரைப்பெண்ணை - அலைகளை யுடைய கங்கையாகிய பெண்ணை. திருவுந்தியாகிய பொன்முகரி; உந்தி - நதி.